001411 2633/24

ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 18 MAR 2025

**சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை**

**பிறப்பிப்பவர்: மரு. இரா. பிருந்தா தேவி, இ.ஆ.ப.,**

**செ.மு.ந.க.எண்.E2213302/2024/நி4,** **நாள். 13.03.2025**

பொருள்: பணியமைப்பு – சேலம் மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி–II (Non Interview Post) (Group–IIA Service) மூலம் நேரடி உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டது – **உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல்** – தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1040/PSD–A2/2024, நாள்:24.06.2024
2. சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.E2213302/2024/நி4, நாள்.24.07.2024
3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிநாள்.08.10.2024 மற்றும் 20.11.2024,
4. முதல்வர் அரசு கலை கல்லூரி(த), கோவை அவர்களின் ஓ.மு.எண்.1832/கே/2024, நாள்.16.10.2024
5. The Director PU- CDOE, Periyar University, Salem Ref.No.PU/CODE/GEN/1563/2024, 18.10.2024
6. தலைமை ஆசிரியர், எம்.எம்.பள்ளி, ராசிபுரம் அவர்களின் உண்மைதன்மை சான்று நாள்.25.11.2024
7. தலைமை ஆசிரியர், பாப்பாரப்பட்டி ஊ.ஒ.ந.நி.பள்ளி, தருமபுரி அவர்களின் உண்மைதன்மை கடித நாள்.26.11.2024
8. தலைமை ஆசிரியர், தத்தனேரி ஆரம்பப்பள்ளி, மதுரை அவர்களின் உண்மைதன்மை கடித நாள்.26.11.2024
9. தலைமை ஆசிரியர், திரு.வி.க மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, மதுரை அவர்களின் உண்மைதன்மை கடித நாள்.26.11.2024
10. பதிவாளர்(பொ), தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்களின் உண்மைத்தன்மைச் சான்று நாள்.28.11.2024
11. தலைமை ஆசிரியர், யா.ஒத்தக்கடை ம.கி.ஊ.ஒ.தொ.பள்ளி, மதுரை அவர்களின் உண்மைத்தன்மை கடித நாள்.27.11.2024

(த.பி.பா...)

12. தலைமை ஆசிரியர், இராசிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் அவரிகளின் உண்மைதன்மை சான்று நாள்.28.11.2024
13. தலைமை ஆசிரியர், கோ மாநகராட்சி தொடக்கப்பள்ளி, கோவை அவரிகளின் உண்மைதன்மை கடித நாள்.28.11.2024
14. தலைமை ஆசிரியர், மாநகராட்சி இருபால் மேல்நிலைப்பள்ளி, கோவை அவரிகளின் உண்மைதன்மை கடித
15. தலைமை ஆசிரியர். தி.சு.சி.அ.ஆ.மே.நி.பள்ளி, தருமபுரி அவரிகளின் உண்மைதன்மை கடித நாள்.28.11.2024
16. சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்E2213302/2024/நி4, நாள்.09.12.2024
17. சம்மந்தப்பட்ட சார்நிலை அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ள முன்மொழிவுகள்.

((()))

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 25.02.2023 அன்று (அறிவிக்கை எண்.03/2022) முதன்மை தேர்வு நடத்தப்பட்ட தொகுதி–IIA (Non Interview Posts) (Group–IIA Services)––இல் "உதவியாளர்" பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை (1)–இன்படி சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதேர்வர்களுக்கு பார்வை(2)–ன்படி பணி நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது.

கீழ்காணும் அட்டவணையில் வரிசை எண்.9.10 மற்றும் 11–ல் குறிப்பிட்டுள்ள திரு.மு.ஆனந்தன், திருமதி.மா.சுசிலா மற்றும் திரு.ஜே.ரபீக்ராஜா ஆகியோர் 1 ஆம் வகுப்பு முதல் இளங்கலை பட்டப்படிப்பு வரை தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான இட ஒதுக்கீட்டில் உதவியாளர்களாக நேரடி பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பார்வை(1)–ல் காணும் தேர்வாணைய கடிதத்தில், பத்தி எண்.8ல்,மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு தமிழ்வழியில் கல்வி பயின்றமைக்கான PSTM சான்றிதழ்களின் உண்மைத்தன்மை உறுதி செய்து உரிய அலுவலர்களிடமிருந்து அறிக்கை பெற்ற பின்னர் பணிவரன்முறை செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த.பி.பா...)

*"The selection for appointment by direct recruitment to this post is purely provisional subject to verification and acceptance of genuineness of PSTM claims made in the online application. He / She is also informed that if his / her PSTM claims are found to be not genuine, subsequently, he / she is liable for penal and legal action including recovery of salary as a consequence thereof".*

பார்வை(3)-ன்படி தமிழ்வழி கல்வி பயின்றமைக்கான சான்றுகளின் உண்மைத் தன்மையின் விவரத்தினை தெரிவிக்ககோரி சம்மந்தப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி தலைமை அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி, பார்வை (4) முதல் (15) வரை வரப்பெற்ற கடிதங்களில் மேற்குறிப்பிட்ட பணியாளர்களுக்கு 1 ஆம் வகுப்பு முதல் இளங்கலை பட்டப்படிப்பு வரை தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான PSTM சான்றிதழ்களின் உண்மைத்தன்மை உறுதி செய்து அறிக்கை வரப்பெற்றுள்ளது.

எனவே, ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி-II (Non Interview Post) (Group-IIA Service) மூலம் நேரடி உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பார்வை (1)-இன்படி சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை(2)-ன்படி பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு அவர்கள் பணியேற்ற நாளில் உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | உதவியாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | தற்போது வகிக்கும் பதவி/பணிபுரியும் அலுவலகம் | உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | மு.ஜெயந்தி | உதவியாளர், பனமரத்துப்பட்டி | 05.08.2024 முற்பகல் | 05.08.2024 முற்பகல் |
| 2. | எஸ்.ஹேமா | உதவியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், சேலம் உபகோட்டம். | 06.08.2024 முற்பகல் | 06.08.2024 முற்பகல் |

(த.பி.பா...)

| வ. எண் | உதவியாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | தற்போது வகிக்கும் பதவி/பணிபுரியும் அலுவலகம் | உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 3. | இ.ஷோபனா | உதவியாளர், வீரபாண்டி | 07.08.2024 முற்பகல் | 07.08.2024 முற்பகல் |
| 4. | செ.மீரா | ஊர்நலஅலுவலர் நிலை-1 வாழப்பாடி | 26.07.2024 முற்பகல் | 26.07.2024 முற்பகல் |
| 5. | வெ.சரண்யா | உதவியாளர், வீரபாண்டி | 31.07.2024 முற்பகல் | 31.07.2024 முற்பகல் |
| 6. | ர.பிரியங்கா | ஊர்நல அலுவலர் நிலை-1, பனமரத்துப்பட்டி | 29.07.2024 முற்பகல் | 29.07.2024 முற்பகல் |
| 7. | ரா.இந்துஜா | உதவியாளர், பனமரத்துப்பட்டி | 26.07.2024 பிற்பகல் | 26.07.2024 பிற்பகல் |
| 8. | ச.சுவேதா | உதவியாளர், ஆத்தூர் | 08.08.2024 முற்பகல் | 08.08.2024 முற்பகல் |
| 9. | மு.ஆனந்தன் | உதவியாளர், காடையாம்பட்டி | 26.07.2024 முற்பகல் | 26.07.2024 முற்பகல் |
| 10. | மா.சுசீலா | உதவியாளர், பனமரத்துப்பட்டி | 01.08.2024 முற்பகல் | 01.08.2024 முற்பகல் |
| 11. | ஜே.ரபீக்ராஜா | ஊர்நல அலுவலர் நிலை-1, சங்ககிரி. | 26.07.20204 முற்பகல் | 26.07.20204 முற்பகல் |

மேற்கண்ட விவரப்படி பணிவரன்முறை தொடர்பான விவரங்களை மேற்காணும் பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலகத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியருக்காக,
சேலம்.

(த.பி.பா...)

13.03.25

பெறுநர்.

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்.
(அலுவலகத்தலைமை வழியாக)

நகல் – செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 003.

நகல் – உதவி செயற்பொறியாளர் (ஊ.வ), சேலம் கோட்டம்.

நகல் – வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ / கி.ஊ),
பனமரத்துப்பட்டி, வீரபாண்டி, வாழப்பாடி, ஆத்தூர், காடையாம்பட்டி, சங்ககிரி

நகல் – நி–4 இருப்பு கோப்பிற்கு.

ஊராட்சி ஒன்றியம்,
பனமரத்துப்பட்டி.

பே.எ.ந.க.எண்: 2633/2024/அ1 நாள்: 12.04.2025

— சார்வு செய்யப்படுகிறது —

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
பனமரத்துப்பட்டி

பெறுதல்:
திருமதி. மு. ஜெயந்தி,
உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
பனமரத்துப்பட்டி.